சுருக்கம்

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை – கிராம ஊராட்சிகளில் பணியாற்றி வரும் ஊராட்சி உதவியாளர்களுக்கு ஓய்வு பெறும்போது ஒட்டுமொத்த தொகையாக ரூ.50,000/–, சிறப்பு ஓய்வூதியமாக மாதம் ரூ.700/– மற்றும் மருத்துவப் படியாக மாதம் ரூ.100/– வழங்குவது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை

அரசாணை (நிலை) எண். 22 நாள்: 14.02.2011

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.175, ஊரக வளர்ச்சி துறை, நாள் 5.12.2006.
2. அரசாணை (நிலை) எண்.234, நிதித் துறை, நாள் 1.6.2009.
3. அரசாணை (நிலை) எண்.91, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை, நாள் 12.8.2009.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடிதம் ந.க. எண்.99250/2010/இ3, நாள் 27.12.2010 மற்றும் 10.02.2011.

-----

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் முழுநேர ஊராட்சி உதவியாளர்களை "ஊராட்சி உதவியாளர்கள் நிலை–1" என்றும், பகுதிநேர ஊராட்சி உதவியாளர்களை "ஊராட்சி உதவியாளர்கள் நிலை–2" என்றும் பெயர் மாற்றம் செய்ததோடு அவர்களை தொகுப்பூதியத்திலிருந்து காலமுறை ஊதியத்திற்கு மாற்றம் செய்து 01.09.2006 முதல் ஊராட்சி உதவியாளர் நிலை–1க்கு ரூ.1300–20–1500–25–2000 ஊதிய விகிதமும் ஊராட்சி உதவியாளர் நிலை–2க்கு ரூ.625–10–725–20–925 ஊதிய விகிதமும் நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டது. மேலும் இவர்கள் காலமுறை ஊதியத்திற்கு கொண்டுவரப்பட்டாலும் முறையான பணியமைப்பின்பாற்பட்ட பணியாளர்களுக்கு அனுமதிக்கப்படும் ஓய்வூதியப் பயன்கள், தேர்வு நிலை, சிறப்பு நிலை, கருணை அடிப்படையில் வாரிசுகளுக்கு நியமனம், வருங்கால வைப்பு நிதி, ஈட்டிய விடுப்பு காசாக்குதல் போன்ற சலுகைகள் நடைமுறையிலுள்ள விதிகளின்படி இப்பணியிடத்திற்கு அனுமதிக்கத்தக்கவை அல்ல எனவும் மேலே உள்ள அரசாணையில் உத்திரவிடப்பட்டது. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் ஊராட்சி உதவியாளர் நிலை–1க்கு ரூ.2500–5000+ரூ.500 தர ஊதியமும் ஊராட்சி உதவியாளர் நிலை–2க்கு ரூ.1300–3000 +ரூ.300 தர ஊதியமும் நிர்ணயிக்கப்பட்டது.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு ஊராட்சி உதவியாளர் பணியிடம் மட்டுமே உள்ளது என்ற நிலையில், ஊராட்சி உதவியாளர் நிலை–1 மற்றும் நிலை–2 ஆகிய இரு பிரிவு பணியாளர்களும் ஊராட்சிகளில் ஒரே விதமான பணிகளை மேற்கொள்ளுவதால் ஊராட்சிகளிலுள்ள ஊராட்சி உதவியாளர் நிலை–2 பணியிடங்களை ரூ.2500–5000 என்ற ஊதிய விகிதத்தில் ரூ.500 தர ஊதியத்துடன் நிலை உயர்த்தியும் அனைத்து பணியிடங்களும் ஊராட்சி உதவியாளர் பணியிடங்கள் என அழைக்கப்படும் எனவும் ஆணையிடப்பட்டது.

3. மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், ஊராட்சி உதவியாளர்களைப் போல் தொகுப்பூதியம் பெற்று பின்னர் சிறப்பு காலமுறை ஊதியத்திற்கு கொண்டுவரப்பட்டு பின் அரசாணை (நிலை) எண். 234, நிதித் துறை, நாள் 01.06.09ன்படி ரூ.2500–5000+ரூ.500 தர ஊதியம் அனுமதிக்கப்பட்ட சத்துணவு அமைப்பாளர்களுக்கு பின்வரும் சலுகைகள் அனுமதிக்கப்பட்டு பயனடைந்து வருகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

(அ) அரசாணை (நிலை) எண். 62, சமூக நலம் மற்றும் சத்துணவுத் (சதி2) திட்டத் துறை, நாள் 28.4.2005ன்படி வரையறுக்கப்படாத ஊதிய விகிதங்களில் ஊதியம் பெறும் அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் சத்துணவு அமைப்பாளர்களுக்கு பணியிலிருந்து ஓய்வு பெறும் போது ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) ஒட்டுமொத்தத் தொகையாக அளிக்கப்படுகிறது.

(ஆ) அரசாணை (நிலை) எண். 391, நிதி (ஊதியப் பிரிவு) துறை, நாள் 15.9.2008ன்படி (வயது முதிர்வின் காரணமாக மட்டும்) 15.9.2008 முதல் பணியிலிருந்து ஓய்வு பெறும் சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்களுக்கு சிறப்பு ஓய்வூதியமாக ரூ.700/– பிரதி மாதம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

(இ) அரசாணை (நிலை) எண். 176, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் (சஉதி2) துறை, நாள் 31.12.2009–ன்படி அரசு அலுவலர்களுக்கு மருத்துவப்படி வழங்கப்படுவது போன்று சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்களுக்கும் மருத்துவப்படி மாதம் ரூ.100/– (ரூபாய் நூறு மட்டும்) வழங்க அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

4. எனவே, சத்துணவுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளவாறு பணியிலிருந்து ஓய்வு பெறும் போது ஒட்டு மொத்த தொகையாக ரூ.50,000/– சிறப்பு ஓய்வூதியமாக பிரதி மாதம் ரூ.700/– மற்றும் மருத்துவப்படி மாதம் ரூ.100/– ஆகிய சலுகைகளை ஊராட்சி உதவியாளர்களுக்கும் பொருந்துமாறு ஆணை வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசைக் கோரியுள்ளார். மேலும், இச்செலவினங்களை சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

..3

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவை ஏற்று பின்வரும் சலுகைகளை கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி உதவியாளர்களுக்கு வழங்கிட அரசு ஆணையிடுகிறது.

(அ) வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெறும் போது ஒட்டு மொத்தத் தொகையாக ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) வழங்கப்படும்.

(ஆ) சிறப்பு ஓய்வூதியமாக பிரதி மாதம் ரூ.700/–(ரூபாய் எழுநூறு மட்டும்) வழங்கப்படும்.

(இ) பணியிலுள்ள ஊராட்சி உதவியாளர்களுக்கு மருத்துவப்படி மாதம் ரூ.100/– (ரூபாய் நூறு மட்டும்) வழங்கப்படும்.

6. இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல் இச்சலுகைகள் நடைமுறைக்கு வரும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

7. இச்செலவினம் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அரசு ஆணையிடுகிறது.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 505 /FS/P/2011, நாள் 11.02.2011–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.அலாவுதீன்
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>:
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள். (சென்னை மாவட்டம் நீங்கலாக)
இயக்குநர், கருவூலங்கள் மற்றும் கணக்குகள் துறை, சென்னை–15.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை, சென்னை–108.
<u>நகல்</u>:
முதுநிலை நேர்முக உதவியாளர், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை.
முதுநிலை நேர்முக உதவியாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை.
நிதி (ஊரக வளர்ச்சி/ஓய்வூதியம்/ஊதியக் குழு) துறை, சென்னை–9.
உதிரிகள்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

கோ. சரவணன் 14/2/2011
பிரிவு அலுவலர்